மாண்புமிகு திரு. க. இராசாராம் : தலைவர் அவர்களே, பொதுவாக, வீட்டு மனை விலை ஏற்றத்தைத் தடுப்பதற்கான முறையிலே சட்டம் கொண்டு வர ஆலோசித்துக் கொண்டிருக்கிறோம்.

திருமதி த. ந. அனந்தநாயகி : தனி நபர்கள் போட்டிருக்கிற குடிசைகளுக்கு வாடகை வாங்கமுடியாது என்ற காரணத்திற்காக விற்று, அந்தப் பணத்தைக்கொண்டு வேறு முதலீடு செய்யலாம் என்ற முறையிலேதான் தனியார்கள் ஸ்லம் கிளியரன்ஸ் போர்டுக்குத் தருகிறார்கள். அரசாங்கம் முதலிலே, புறம்போக்கு, கார்ப்பரேஷன் நிலங்களிலே கட்ட ஆரம்பித்து, இந்த வேலைகளைச் செய்ய ஆரம்பித்தால், குறைந்த விலையில் அதிகமான வீடுகள் கட்டவசதி ஏற்படும். அதேபோல், தனியார் நிலங்களை வாங்குவது மாதிரி, கோயில் நிலங்களை வாங்க முயற்சி செய்ய வேண்டும். அதற்கொரு ஸ்டாண்டர்ட், இதற்கொரு ஸ்டாண்டர்ட் வைக்கலாமா ?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : தலைவர் அவர்களே, பெரும்பாலும் குடிசைப் பகுதிகள் எங்கே அமைக்கப்பட்டிருக்கின்றனவோ, அதே இடத்திலே குடிசை மாற்று வாரியத்திற்கான மாடிக் கட்டிடங்களைக் கட்ட வேண்டுமென்று குடிசையில் வாழ்கின்றவர்கள் விரும்புகிறார்கள். அந்த இடத்தைக் காலி செய்து, வேறிடத்தில், அரசாங்கப் புறம்போக்கு எங்கே இருக்கிறது என்று பார்த்து 2 பர்லாங் அல்லது ஒரு மைல் தூரத்திலே இருந்தால், அங்கே சென்று குடியிருக்க மறுக்கிறார்கள். ஆகவேதான் குடிசைகள் இருக்கிற இடத்திலே வாங்கி, அங்கேயே கட்டித் தீரவேண்டிய அவசியம் அரசுக்கு ஏற்படுகிறது.

Seats in Cinema Theatres.

* 509 Q.—THIRU N. DENNIS: Will the Hon. the Minister for Electricity be pleased to state—

(*a*) whether the squatting on the floor in cinema theatres has been abolished in this State during show hours ; and

(*b*) if so, the details thereof ?

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் : (அ) & (இ) இம்மாநிலத்தில் உள்ள நிலையான, ஓரளவு நிலையான திரைப்பட அரங்குகள் அனைத்திலும் கடைசி வகுப்புக்கு பெஞ்சுகள் அல்லது நாற்காலிகள் போடப்பட்டிருக்க வேண்டும் என்று உள்துறை யின் 4—10—1973 ஆம் நாளிட்ட 2612 ஆம் எண் ஆணையில் அரசு தெரிவித்துள்ளது. கடைசி வகுப்பில் பெஞ்சுகள் அல்லது நாற்காலிகள் போடுவதால் கட்டுமான அமைப்பு மாற்றப்பட வேண்டிய திரைப்பட அரங்கு களுக்கு அதற்கேற்றவாறு அவை புதுப்பிக்கப்படும் வரையில் இந்த விதியைப் பின்பற்ற வேண்டிய அவசியமில்லை.

1974 மார்ச் 19]

திரு. என். டென்னிஸ் : தலைவர் அவர்களே, அரசு ஆணை பிறப்பித்த பிறகும் இது நடைமுறையில் கையாளப்படுவதாகத் தெரியவில்லை. ஆகையால், நடைமுறையில் செயல்படுத்தாதவர்கள் மேல் நடவடிக்கை எடுக்க அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் : தலைவர் அவர்களே, பெர்மனெண்ட் அண்ட் செமி பெர்மனெண்ட் என்று சொல்லப்படுகின்றவைகளுக்கு பெஞ்ச் போட வேண்டுமென்று விதி. இடையிலே நிரந்தரமாக கட்டட அமைப்பை மாற்றி அமைக்கவேண்டுமென்று, மாற்றி அமைக்கின்ற காலத்திற்குத்தான் போடவேண்டியதில்லை. அப்படி யாரும் போடாமல் இருந்தால் நடவடிக்கை எடுக்கலாம்.

திரு. நா. வீராசாமி : தலைவர் அவர்களே, தரை டிக்கட்டுகளுக்குப் பதிலாக பெஞ்ச் போட்டப்பட்டிருக்கிற நேரத்திலே கட்டணம் உயர்த்தப்பட்டிருக்கிறது. சினிமாவுக்கு பொழுதுபோக்குக்காகப் போகிறோம். அங்கே புகை பிடிக்கக் கூடாது என்று சட்டம் போட்டிருக்கிறோம். சினிமாவுக்குப் போனால், ஊளை இடுவதையும், விசில் அடிப்பதையும் கேட்க வேண்டியிருக்கிறது. பொழுதுபோக்குத் தன்மையைக் கெடுக்கின்ற இந்த ஊளை இடுவதையும், விசில் அடிப்பதையும் தடுக்க சட்டம் போட முடியுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் : தலைவர் அவர்களே, சட்டம் ஒன்றும் போட முடியாது. சினிமாக் கொட்டகையில் விசில் அடிக்கிறவர்கள் அதோடு நின்றுவிட்டால் போதுமானது. அந்த வியாதி வெளியிலே பரவாமல் இருந்தால் நல்லது என்று கருதுகிறேன்.

Electrocution cases in Velachery.

*510 Q.—THIRU R. R. MUNUSAMI: Will the Hon. the Minister for Electricity be pleased to state :—

(a) whether a number of cows were electrocuted at Velachery near Madras about the 6th September 1973 at public places ; and

(b) if so, the details thereof ?

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் : (அ) & (இ) சென்னைக்கு அருகில் வேளச்சேரியில் 1973 செப்டம்பர் 6 ஆம் நாளன்று 6 மாடுகளும், ஒரு எருதும் மின்சாரம் பாய்ந்து இறந்தன.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினாக்கள்-விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு.—ஓர் உரையின் தொடக்கத்தில் வெள்ளிக்குறி(*) இடப்பட்டிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்.]